# தொழிற் கூட்டமைப்பு மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

1 டிரில்லியன் பொருளாதார மாநிலமாக உயர்த்திட ஒரு உயரிய இலக்கு நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம்.

பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி! சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி! பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் போன்ற கொள்கைகளை அடித்தளமாக கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை எங்களுடைய இலக்காக கொண்டிருக்கிறோம்! இதனால்தான், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து தனித்து விளங்குகிறது!

நம்முடைய தமிழ்நாடு, நகர்ப்புற மக்கள் தொகை அதிகம் கொண்ட மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலம் மட்டுமல்ல, மிகவும் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலம்! இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள், தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை கொண்டுவர நாங்கள் எடுத்து வரும் முயற்சிகள் பலன் அளித்து வருகிறது. கோயம்புத்தூர், திருச்சி, ஓசூர், மதுரை, சேலம், தூத்துக்குடி போன்ற நகரங்களும் பொருளாதார சக்திகளாக உருவெடுத்திருக்கிறது.

### மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம்!

நேற்று முன்தினம்கூட, நம்முடைய வளர்ச்சியை எடுத்துக்காட்டுவது போன்ற செய்திகளை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்தியாவின் மொத்த மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் 37.1 விழுக்காட்டோடு தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதுவும் கடந்த 11 மாதங்களில் 12.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணு பொருட்களை ஏற்றுமதி செய்து புதிய உச்சத்தை தொட்டிருக்கிறோம்.

உலகின் முன்னணி நிறுவனங்களான, ஃபாக்ஸ்கான், வின்ஃபாஸ்ட், செம்ப்கார்ப், கார்னிங் தங்கள் உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் தொடங்க முன்வந்திருப்பதே, இதற்கு ஒரு சான்று!

அதுமட்டுமல்ல, நிலைத்தன்மை நடவடிக்கைகள் மேற்கொள்வதில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. சென்னையை சுற்றியிருக்கும் தொழிற்சாலைகளுக்கு, TTRO முறையில், தண்ணீர் வழங்கப்படுகிறது. மேலும் பசுமை திட்டங்களை ஊக்குவிக்க, தமிழ்நாடு தொழில் கொள்கை 2021ன்படி பசுமை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

தொழில் துறைக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, பல்வேறு திட்டங்களை, இந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறோம். அதில் சிலவற்றை மட்டும் நான் சொல்ல வேண்டும் என்றால்,

### தொழில்துறைக்கு வலுசேர்க்க மேலும் திட்டங்கள்!

- 500 கோடி ரூபாயில் தமிழ்நாடு செமி கண்டக்டர் மிஷன்
- சூலூர் மற்றும் பல்லடத்தில் தலா 100 ஏக்கர் பரப்பளவில், செமி கண்டக்டர் உற்பத்திப் பூங்கா
- சென்னைக்கு அருகில் உலகளாவிய நகரம் என்று பல அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறோம்.

தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு இடையிலான நட்புறவை தொடர்ந்து வலுப்படுத்துவேன் என்று இந்த நிகழ்ச்சியில் நான் உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நகர்ப்புற உள்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாழ்க்கைத் தர முயற்சிகளை முன்னெடுப்பதிலும் இந்த ஒத்துழைப்பு தொடரும்.

பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் நகரங்களுக்கு இந்த வளர்ச்சியோடு மக்கள் வாழ எல்லா வகையிலும் ஏற்றதாக இருக்க வேண்டும். மக்களின் மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் நகரங்கள் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட வேண்டும்.

### உலகத் தரத்தில் சென்னை மாநகரம்!

சென்னையை ஒரு உலக தரத்திலான நகரமாக உருவாக்க, மூன்றாவது முழுமைத் திட்டத்தை (3rd Master Plan) தயாரித்துக்கொண்டு வருகிறோம்.

> **பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி! சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி! பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் போன்ற கொள்கைகளை அடித்தளமாக கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை எங்களுடைய இலக்காக கொண்டிருக்கிறோம்! இதனால்தான், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து தனித்து விளங்குகிறது!**

மாநில அரசு சார்பாக கோயம்புத்தூர், மதுரை, ஓசூர், சேலம், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி உள்ளிட்ட 136 நகரங்களுக்கு முழுமைத் திட்டங்களை (Master Plan) உருவாக்கிக்கொண்டு இருக்கிறோம். இதன் மூலம் நகர விரிவாக்கங்கள் நடைபெறும்போது மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மேம்படும்.

பசுமை இயக்கத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு செயல்படுகிறது. நம்முடைய மின்வாகனக் கொள்கை மாநிலத்தை E.V. உற்பத்தியின் மையமாக மாற்றி இருக்கிறது. ஓலா, வின்ஃபாஸ்ட், டாடா மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள், தங்களின் திட்டங்களை நம்முடைய மாநிலத்தில் நிறுவியிருக்கிறார்கள். மேலும், பசுமை ஹைட்ரஜன் திட்டங்களிலும் முக்கிய முதலீடுகள் செய்யப்பட்டிருக்கிறது. உலகளாவிய முன்னோடிகளுடன் இணைந்து, தூய்மையான ஆற்றலில் அடுத்த தலைமுறை தீர்வுகளை உருவாக்க தமிழ்நாடு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

### நகர்ப்புற வெள்ளத்தை தகர்க்க நடவடிக்கை!

நகர்ப்புற நிலைத்தன்மைக்கு நீர் பாதுகாப்பும் கழிவு மேலாண்மையும் மிகவும் முக்கியம். இதைக் கருத்தில் கொண்டுதான், தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு நீர் பாதுகாப்பு திட்டம் மூலம் மழைநீர் சேகரிப்பு, ஏரிகள் புதுப்பித்தல், மற்றும் நீர்வளங்களை திறம்பட நிர்வகித்தல் போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறோம். திடக்கழிவு மேலாண்மை மற்றும் சர்க்குலர் எக்கானமி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி, சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாக்க மறுசுழற்சி மற்றும் கழிவுகளை ஆற்றலாக மாற்றும் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. கழிவு நீர் வடிகால் அமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, நகர்ப்புற வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பேணவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மூலமாக, நிலைத்தன்மை கொண்ட வாழ்விடங்களை ஊக்குவித்து, கார்பன் பயன்பாட்டை குறைத்து, காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள நினைக்கிறோம். நகரங்களை வாழ்வதற்கு ஏற்றதாகவும் நிலைத்தன்மை கொண்டதாகவும் மாற்றுவது சமூகப் பொறுப்பாக மட்டுமல்லாமல், இது உங்களுக்கெல்லாம் ஒரு பொருளாதார வாய்ப்பாகவும் இருக்கும். எனவே, மின்சார போக்குவரத்து, நிலையான கட்டுமானம் மற்றும் தூய்மையான தொழில்நுட்பம் போன்ற பசுமை பொருளாதாரத் துறைகளில் தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு உங்களை இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

புத்தாக்கமான ஸ்மார்ட் நகர தீர்வுகள், ஆற்றல் செயல்திறன் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற திட்டங்களில் எங்களுடன் இணைந்து செயல்படுங்கள் என்று உங்களுக்கு நான் இந்த நேரத்தில் அழைப்பு விடுக்கிறேன்.

வாழ்வதற்கேற்ற, நிலைத்தன்மை கொண்ட மற்றும் செழிப்பு நிறைந்த நகரங்களை உருவாக்குவதுதான், நம் எல்லோருடைய இலக்கு!

### எதிர்காலத் தலைமுறையின் நலனை பாதுகாப்போம்!

தமிழ்நாடு அரசு, உங்களுடனும், தொழில் துறையுடனும் இணைந்து உலகத் தரத்திற்கேற்ப உள்கட்டமைப்புகளை உருவாக்க உறுதிபூண்டிருக்கிறது. இது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, எதிர்கால தலைமுறையின் நலனையும் பாதுகாக்கும்.

வளர்ச்சியும் நிலைத்தன்மையும் ஒன்றிணையும் இந்த மாற்றம் நிறைந்த பயணத்தில், தமிழ்நாடு உங்களை அன்புடன் வரவேற்கிறது என்று உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநாடு வெற்றியடைய என்னோட வாழ்த்துகள்!

தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடக் கூடாது. மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்கொண்டு இருக்கும் நம்முடைய தமிழ்நாட்டுக்கு உங்களோடு தொடர்பில் இருக்கும் முதலீட்டாளர்களை நீங்கள் அழைத்துக் கொண்டு வர வேண்டும்.

நம் நகரங்கள் உலகளவில் போட்டி போடக் கூடியவைகளாக மட்டுமல்லாமல், இன்றைக்கு வாழ்வதற்கேற்ற, நிலையான மற்றும் அனைவருக்குமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய உயரிய நோக்கம். அந்த இலக்கை அடைந்திட ஒன்றாக முன்னேறுவோம் வாருங்கள் என்று உங்களை அன்புடன் கேட்டு, விடை பெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – 100 நாள் வேலைத் திட்டத்திற்கு

# நிதி ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

**டாக்டர் எ.வ.வே.கம்பன் – சி.என்.அண்ணாதுரை எம்.பி. – மு.பெ.கிரி எம்.எல்.ஏ. – பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!**

*திருவண்ணாமலை, மார்ச் 29 -*

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, ஒவ்வொரு ஒன்றியங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் கழக பொறுப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இன்று (29.3.2025 - சனிக்கிழமை காலை சரியாக 9.00 மணிக்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் உள்ள 20 கழக ஒன்றியங்களில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் நிதி ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

திருவண்ணாமலை மத்திய ஒன்றியத்தில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, செங்கம் மேற்கு ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ. கிரி, கலசப்பாக்கம் கிழக்கு ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

திருவண்ணாமலை மேற்கு ஒன்றியம், திருவண்ணாமலை கிழக்கு ஒன்றியம், கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம், கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம், துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியம், செங்கம் மத்திய ஒன்றியம், செங்கம் கிழக்கு ஒன்றியம், தண்டராம்பட்டு மேற்கு ஒன்றியம், தண்டராம்பட்டு கிழக்கு ஒன்றியம், தண்டராம்பட்டு மத்திய ஒன்றியம், ஜவ்வாது மலை தெற்கு ஒன்றியம், கலசப்பாக்கம் மேற்கு ஒன்றியம், புதுப்பாளையம் கிழக்கு ஒன்றியம், புதுப்பாளையம் மேற்கு ஒன்றியம், ஜவ்வாதுமலை வடக்கு ஒன்றியம், போளூர் வடக்கு ஒன்றியம் ஆகிய இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறது.

ஒன்றியச் செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், சி.சுந்தர பாண்டியன், ஆராஞ்சி.ஆறுமுகம், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், இரா.ராஜேந்திரன், வி.பி. அண்ணாமலை, சி.மாரிமுத்து, பா.ராமஜெயம், சி.கே.பன்னீர்செல்வம், ப. கேசவன், கோ.ரமேஷ், எஸ். சிவசேமன், க.சுப்பிரமணி, ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.



---

# அன்று கேட்ட அதே குரல், இன்றும் கேட்கிறது !



திராவிட நாயகர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், மு.க.ஸ்டாலின் அவர்கள் மார்ச் 22 அன்று, நாடாளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய கருத்தியல் ரீதியான தொடக்க உரையும், அடுத்து மார்ச் 25 அன்று சட்டப் பேரவையில், இருமொழிக் கொள்கை சம்பந்தமான சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பதிலளித்து ஆற்றிய திட்டவட்டமான தெளிவுரையும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஒன்றிய அரசு, சூழ்ச்சிச் சிந்தையோடு வலிந்து திணிக்க முயற்சிக்கும் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு, “மாநில உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய பா.ஜ.க.விடமிருந்து, இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க, கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்த, உரிமைகளை மீட்டெடுக்க நாம் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றிணைந்து போராடுவோம் " என்று மார்ச் 22 அன்று அழைப்பு விடுத்தார் தமிழ்நாடு முதல்வர்.

**"நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலமும், ஒவ்வொரு வகையில் தனித்தன்மை கொண்டது! பல்வேறு மொழிகள் - இனங்கள் - வழிபாட்டு நம்பிக்கைகள் - பண்பாடுகள் - உடைகள் - உணவுகள் - பழக்க வழக்கங்கள் கொண்டதுதான், இந்தியா! இத்தகைய மாநிலங்கள் சுயாட்சித் தன்மையுடன் செயல்பட்டால் தான் - இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி உருவாக முடியும்! " என்று இந்தியாவின் பன்முகத் தன்மையினையும், மாநில சுயாட்சியின் அவசியத்தையும் தமது உரையில் அடிக்கோடிட்டுக் காட்டி, "மாநில சுயாட்சி உரிமையை நிலைநாட்டிட, தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய" தேவையையும் வலியுறுத்தினார் நமது முதல்வர்.**

மார்ச் 25 அன்று சட்டப் பேரவையில், " மாநில சுயாட்சியை உறுதி செய்து, மாநில உரிமைகளை நிலைநாட்டினால்தான் தமிழ் மொழியையும் காக்க முடியும், தமிழினத்தையும் உயர்த்த முடியும்" என்று உறுதிபடத் தெரிவித்தார் முதல்வர்.

இந்திய ஜனநாயக மேம்பாடு, கூட்டாட்சி உறுதிப்பாடு, மொழிப் பாதுகாப்பு - இன உயர்வு, வளர்ச்சி என இவை அனைத்தும் "மாநில சுயாட்சி" என்ற மாண்புறு தத்துவத்தை மையமாகக் கொண்டே ஆக்கபூர்வமாக இயங்கிட முடியும்; மாநில சுயாட்சி மலர்ந்தால்தான், மக்களாட்சியின் மகத்துவமும், நோக்கமும் முழுமையாக நிறைவேறும்.

திராவிட முன்னேற்றக் கழகம், இன்று நேற்றல்ல, எப்போது “திராவிட நாடு” கோரிக்கையைக் கைவிட்டதோ, அன்றிலிருந்தே கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக, சட்ட மன்றத்திலும், வெட்ட வெளியிலும், கன்னியாகுமரி முதல் காஷ்மீரம்வரை, வாய்க்கும் முனைகளிலெல்லாம்,தொடர்ந்து மாநில சுயாட்சி முழக்கத்தை எழுப்பிக்கொண்டிருக்கிறது.அவ்வப்போது புழுதிவாரித் தூற்றுவோர் கிளம்பினாலும், அதுபற்றிக் கிஞ்சிற்றும் கவலை கொள்ளாமல், போற்றுவோர் போற்றட்டும் என்று, " மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி " எனும் இலட்சியப் பதாகையை உயர்த்திப் பிடித்த வண்ணம் ஊக்கத்துடன் நடைபோடுகிறது திராவிடச் செம்படை!

**சட்டப் பேரவையிலேயே, முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 27.6.1967 அன்று, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசும்போது, " நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன்.ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ, அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிட வில்லை.மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை.மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக் கூடாது என்பதற்காகக் கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை.மாநில சர்க்கார் பல அதிகாரங்களை பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காகக் கேட்டோம்; அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம்; அதை நாங்கள் விட்டுவிடவில்லை. திராவிட நாட்டைத்தான் விட்டு விட்டீர்களே, ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள் என்று கேட்டால் ஒத்துக்கொள்ள முடியுமா? இந்தி எதிர்ப்பை விட்டுவிட மாட்டோம். நமது அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளிலேயே திருத்தங்கள் வேண்டும் என்பதற்காக வாதாடுகிறேன் " என்று எடுத்துரைத்த வைர வாக்கியங்கள் ஒளி பாய்ச்சிக் கொண்டே இருக்கின்றன.**

மாநிலங்களில் முழுமையான சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் அமைந்திட வேண்டுமெனக் கோருவது கழகத்தின் நோக்கங்களில் ஒன்றாக, அதன் சட்ட திட்டங்களில் இடம் பெற்றிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இறுதியாக தமது "ஹோம்ரூல்" ஏட்டில் 'தம்பிக்கு' எழுதிய கடிதத்திலும், " காகிதத்தில் கூட்டாட்சியாகவும்,நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்பு கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டம் " என்று குறிப்பிட்டதை அவர்தம் தம்பிமார்கள் மறந்திடக் கூடுமோ ? அந்தக் கடிதம் அன்றோ "அண்ணாவின் உயில் " எனப் போற்றப்படுகிறது!

**பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சரானதும் 17.3.1969 அன்று டெல்லி சென்றார்.அப்போது செய்தியாளர்கள் கூட்டத்தில்," மாநில அரசுகளுக்கு மத்திய அரசு, அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும்.மாநில அரசுக்கும்,மத்திய அரசுக்கும் நல்லுறவு வளர அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியம்.மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன.அவற்றை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுத்தால், மத்திய அரசின் சுமை குறையும்" என்று, அண்ணா அவர்களின் ஆழ்ந்த எண்ண ஓட்டத்தை அழகாகப் பிரதிபலித்தார்.**

முதலமைச்சர் கலைஞர், வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் மத்திய - மாநில உறவுகள் குறித்துப் பேசினார்.1969 ஏப்ரல் 18 அன்று தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில், மத்திய - மாநில உறவுகள் குறித்து ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும்,அந்த முயற்சியின் முதல் கட்டமாக முதலமைச்சர்கள் கொண்ட குழு ஒன்று மத்திய - மாநில உறவுகள் பற்றி விவாதித்திட வேண்டும் என்றும் கருத்து அறிவித்தார்.

**மத்திய - மாநில உறவுகள் மற்றும் அதிகாரங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக 22.9.1969 அன்று நீதியரசர் ராஜமன்னார் தலைமையில் குழு ஒன்றையும் அமைத்து, 1971ல் அதன் விரிவான அறிக்கையினைப் பெற்று வெளியிட்டார் கலைஞர்.இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மாநில அரசு மத்திய மாநில உறவுகள் குறித்துப் பெற்ற அறிக்கை அதுவாகும்.**

1970 பிப்ரவரியில் நடந்த திருச்சி மாநாட்டில் கலைஞர் , 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதை, கழகத்தின் இலட்சிய முழக்கங்களில் ஒன்றாக ஆக்கினார்.1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 20ல் சட்ட மன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிடச் செய்தார் கலைஞர்.மாநில சுயாட்சிக்கான தீர்மானம், இந்தியாவிலேயே முதன் முதலாகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றி வைத்த தனிச்சிறப்பு கலைஞரின் ஆட்சிக்கே உரித்தானது.

**மாநில உரிமைகள் - மாநில சுயாட்சி எனும் கோட்பாடு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையிலே கருவாகத் திரண்டது. முத்தமிழறிஞர் கலைஞர், அந்தக் கருவுக்குச் சட்ட அடிப்படையிலான உருவம் கொடுத்து உலவ விட்டார்.அண்ணா - கலைஞர் அன்று முன்னெடுத்த உரிமைக் குரலை, இன்று இந்தியா முழுவதும் எதிரொலிக்கச் செய்திருக்கிறார் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், திராவிடப் பெருந்தலைவர் மு.க.ஸ்டாலின்!**

** ** **

**கி.இராஜமாணிக்கம்**

** ** **